நெல்லியாளம் நகராட்சி அலுவலகம்,
பந்தலூர் – நீலகிரி மாவட்டம்.

## <u>சாதாரணக்கூட்டம் 25/05/2018 வெள்ளிக்கிழமை</u>

**<u>பொருள் எண்.1</u>**

தமிழ்நாடு அரசிதழ் எண் 33 நாள் 25.01.2018 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.7234/14/ஆர்1 நாள் 15.03.2018 சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி நகராட்சியில் செயல்படும் அரசு கல்வி நிறுவனங்கள், நகராட்சி கல்வி நிறுவனங்கள் அரசு உதவி பெறும் கல்வி நிறுவங்கள் (சுயநிதி பாடப்பிரிவுகளுக்கான கட்டிடங்கள் தவிர்த்து) மற்றும் அவை சம்பந்தப்பட்ட விடுதிகள், நூலகங்கள் தவிற அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும் சொத்துவரி விதிக்கப்படவேண்டும் என அனைத்து நகராட்சி ஆணையாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டதற்கிணங்க மேற்கண்ட அரசிதழ் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டு அனுமதி பெறப்பட்டுள்ளது. மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.7234/14/ஆர்1 நாள் 28.03.2018 ன்படி தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்ட தமிழ்நாடு நகராட்சி சட்டங்கள் (இரண்டாம் திருத்தம்) சட்டம், 2018 ன்படி நகராட்சி பகுதியில் உள்ள கல்வி நிறுவனங்களுக்கு சொத்துவரி விதிக்க ஏதாவது நகராட்சி ஆணையாளர்களால் அறிவிப்பு வெளியிடப்படவேண்டும் எனவும் ஒரு தமிழ் நாளிதழில் அறிவிப்பு வெளியிடுவதற்கும் மற்றும் அலுவலக அறிவிப்பு செய்வதற்கும் அனுமதி அளித்துள்ளது. இதன்படி தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டம் 1920,பிரிவு 78(3) –ன்படி மேற்கண்ட முறையில் சொத்துவரி விதிப்பு செய்ய உத்தேசிக்கபட்டுள்ள விபரம் அறிவிப்பு செய்வதற்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண்.54/2018, நாள்.26/03/2018–ன்படி அனுமதிக்கப்பட்டு நாளிதழில் 14/04/2018 அன்று வெளியிடப்பட்டிருந்தது. மேலும் இவ்வறிவிப்பு செய்யப்பட்ட 30 நாட்களுக்கு பின்னர் சொத்துவரி விதிப்பினை மேற்கொள்ளுவது குறித்து இறுதி செய்யப்படும் என்றும் இதுகுறித்து ஆட்சேபனைகள் ஏதும் இருப்பின் அதன் விபரத்தை எழுத்து மூலமாக குறிப்பிட்ட நாட்களுக்குள் ஆணையாளருக்கு தெரிவிக்குமாறு குறிப்பிடப்பட்டிருந்தது. தற்போது ஆட்சேபனைகள் மற்றும் அபிப்பிராயங்கள் ஏதும் வரப்பெறவில்லை. எனவே அரசிதழில் கூறப்பட்டுள்ள அறிவுரையின்படி கல்வி நிறுவனங்களுக்கு சொத்துவரி விதிப்பு செய்ய தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.**

அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.2**

நெல்லியாளம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் செயல்பட்டு வரும் கல்லூரிகள், பள்ளிகள் மற்றும் அதில் பணிபுரியும் பணியாளர்கள், திருமண மண்டபங்கள், தொழிற்சாலைகள், மதுபானக்கடைகள், தங்கும் விடுதிகள், வணிகம் சார்ந்த கடைகள், அரசு அலுவலகங்களில் பணிபுரியும் அரசு அலுவலர்கள், அரசு சார்ந்த மற்றும் அரசு சாராத நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.12503/2018/ஆர்1, நாள்.21.05.2018 ல் தெரிவித்துள்ளபடி தொழில்வரியை 25 % குறையாமலும், 35 % மிகாமலும், மேலும் ஒரு வருடத்திற்கு ரூ.2500/-க்கு மிகாமலும், 5 ஆண்டுகளுக்கு மறுநிர்ணயம் செய்ய அரசாணை எண்.11, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.12.01.1999 ல் தெரிவிக்கப்பட்டுள்ள, ஏற்கனவே இந்நகராட்சியில் 01.10.2013 ல், தொழில்வரி உயர்வு செய்யப்பட்டு தற்பொழுது 30.09.2018 அன்றுடன் 5 ஆண்டுகள் முடிவடைவதால் 01.10.2018 முதல் 25 % தொழில்வரியை (2018–2019 இரண்டாம் அரையாண்டு) கீழ்கண்ட பட்டியலில் உள்ள விபரப்படி உயர்த்திகொள்ளவும், மாவட்ட அளவிலான தினசரி நாளிதழ் மற்றும் மாவட்ட அரசிதழில் தொழில்வரி உயர்வு செய்ய வெளியிடவும், அதற்குண்டான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | அரையாண்டு வருமானம் | 01.10.2013 முதல் தொழில்வரி பிடித்தம் செய்யப்பட்ட விபரம் | 01.10.2018 முதல் தொழில்வரி பிடித்தம் செய்யப்பட வேண்டிய தொகை |
|---|---|---|---|
| 1 | ரூ .20001 /- வரை | – | – |
| 2 | ரூ20001 முதல் ரூ .30000 /- வரை | 123 | 150 |
| 3 | ரூ30001 முதல் ரூ .45000 /- வரை | 305 | 380 |
| 4 | ரூ.45001 முதல் ரூ .60000 /- வரை | 610 | 760 |
| 5 | ரூ.60001 முதல் ரூ .75000 /- வரை | 914 | 1140 |
| 6 | ரூ.75001 முதல் அதற்கு மேலும் | 1219 | 1250 |

**அலுவலக குறிப்பு**

1.ஏற்கனவே நிர்ணயம் செய்துள்ள தொழில்வரியை 25 % க்கு குறையாமலும், 35 % க்கு மிகாமலும், ஒரு ஆண்டிற்கு ரூ.1250/ -க்கு மிகாமல் உயர்வு செய்ய மன்றம் முடிவு செய்யலாம்.

2.தினசரி செய்திதாள் மற்றும் மாவட்ட அரசிதழில் விளம்பரம் செய்யவும், அதற்கான செலவு தொகைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.3**

நெல்லியாளம் நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் TN43Z4514 ஹைட்ராலிக் வாகனத்தின் பம்பு பழுது ஏற்பட்டதை பொதுசுகாதாரப் பணியின் அவசரம், அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் விலைப்புள்ளிகள் பெற்று ரூ.31965/–ல் பணி செய்தது தனி அலுவலரின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

பதிவு செய்யலாம்.

**பொருள் எண்.4**

நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட தனியார் கல்வி நிறுவன கட்டிடங்கள் மற்றும் அரசு உதவி பெற்று சுயநிதி படிப்புகளை நடத்திவரும் கல்வி நிறுவன கட்டிடங்கள் மீது சொத்துவரி விதிக்க சட்ட திருத்தம் செய்யப்பட்டுள்ளது தொடர்பான அறிவிப்பு 14/04/2018 ஆம் தேதி தினகரன் நாளிதழில் பிரசுரம் செய்யப்பட்டமைக்கான பட்டியல் தொகை ரூ.10256/– Kal Pablication Pvt Ltm நிறுவனத்திற்கு வழங்கியது தனி அலுவலரின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

பதிவு செய்யலாம்.

தனி அலுவலர்,
நெல்லியாளம் நகராட்சி.

நெல்லியாளம் நகராட்சி அலுவலகம்,
பந்தலூர் – நீலகிரி மாவட்டம்.

## சிறப்புக்கூட்டம் 14/05/2018 திங்கட்கிழமை

**பொருள் எண்.1**

2018-2019ம் ஆண்டு Turif திட்டத்தின் கீழ் தேவாலா அட்டி சாலை வார்டு எண். 10,11 & 4, கண்ணாடியன்படி முதல் சேலக்குன்னா சாலை வார்டு எண்.2, கரியசோலை முதல் சேலக்குன்னா சாலை வார்டு எண்.1, சேலக்குன்னா முதல் பொன்னம்மா பள்ளம் வார்டு எண்.1, மற்றும் கொளப்பள்ளி முதல் உப்பட்டி புஞ்சவயல் சாலை வார்டு எண்.18,19ல் ரூ.300.00 இலட்சத்திற்கு தார் சாலை அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தனி அலுவலரின் பார்வைக்கும், பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதிக்கலாம்

**பொருள் எண்.2**

மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, உதகை அவர்களின் குறிப்பணை B1.எண்.594/2017 நாள்.30.04.2018ன்படி இந்நகராட்சியிக்கு 2017–2018ம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு திட்டத்தின் கீழ் கீழ்கண்ட பணிகளுக்கு நிர்வாக அங்கீகாரம் வழங்கப்பட்டதை தனி அலுவலரின் பார்வைக்கும், பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

பாண்டியார் கத்திரிதோட்டியில் சிறுபாலம் அமைத்தல் ரூ. 7.00 (இலட்சம்)

**அலுவலக குறிப்பு**

அனுமதிக்கலாம்

**பொருள் எண்.3**

நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட பாண்டியார் கத்திரிதோடு சிறுபாலத்திற்கு தடுப்பு சுவர் **(Wing wall)** அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.8.00 இலட்சத்திற்கு தனி அலுவலரின் பார்வைக்கும், அனுமதிக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதிக்கலாம்

**பொருள் எண்.4**

நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட உப்பட்டி அட்டி பம்பு அறை ஒயரிங் செய்ய ரூ.48500/- க்கு மதிப்பீடு தயார் செய்து தனி அலுவலரின் பார்வைக்கும், அனுமதிக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதிக்கலாம்

**பொருள் எண்.5**

நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளிலும் உள்ள பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்ய மின்மோட்டார்கள் 110, டீசல் எஞ்சின் 10, மொத்தம் 120 குடிநீர் குடிநீர் திட்டத்தின் மூலம் பொதுமக்களுக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி பம்பு அறைகளிலுள்ள மின்மோட்டார்கள் மற்றும் டீசல் எஞ்ஜின்கள் இயக்க நகராட்சியில் போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தால் ஒப்பந்த அடிப்படையில் அந்தந்த பகுதிகளிலுள்ள நபர்களை வைத்து மின்மோட்டார்கள் இயக்கப்பட்டு பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது 2017–2018 ஆம் ஆண்டிற்கான ஒப்பந்தகாலம் 30/06/2018 உடன் முடிவடைந்துவிட்டதால் 01/07/2018 முதல் 30/06/2019 முடிய மேற்படி பணிகள் மேற்கொள்ள உத்தேச செவுத்தொகை ரூ.9.00/–த்திற்கு தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.**

ஒப்பந்தப்புள்ளி கோரி பணி செய்ய அனுமதி அளிக்கலாம்.

தனி அலுவலர்,
நெல்லியாளம் நகராட்சி.